கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்கள் முன்பாக

**Under Section 173 BNSS**

DEPUTY SUPDT. OF POLICE
VIGILANCE AND ANTI-CORRUPTION
RAMANATHAPURAM

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

~~(Under Section 154 Cr.P.C)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167238

1. District மாவட்டம் : RAMANATHAPURAM PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் 16/2024 Date: நாள் 29.07.2024

2. (i) Act சட்டம்: P.C Amendment Act 2018 Sections பிரிவுகள்: 7(C) and (A) of P.C.Act as amended in 2018

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.01.2024 Date to : நாள் வரை 27.07.2024

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.07.2024 Time : நேரம் 10.15 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் தொகுதி-II Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி ஸ்ரீ சைமா கார்ஸ் ஹைவேட கம்பெனி இராமநாதபுரம் சுமார் 05 கி.மீ மேற்கு

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் நா. ரகு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் நாகபாண்டியன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35/2024 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் வலைதட்டாளர் சர்வீஸ் (g) Address : முகவரி 21/16, கட்டான் தோப்பு தெரு, கீழக்கரை, கீழக்கரை தாலுகா இராமநாதபுரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. சைய்யது, உதவியாளர், ஆர்.டி.ஓ அலுவலகம், இராமநாதபுரம்
   2) திரு. முருகேசன், மேனேஜர், ஸ்ரீ சைமா கார்ஸ் ஹைவேட கம்பெனி, இராமநாதபுரம்
   3) திரு. நசீர், புரோக்கர், ஆர்.டி.ஓ அலுவலகம், இராமநாதபுரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - தாமதம் ஏதுமில்லை -

Under Section 173 BNSS

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.இராமச்சந்திரன், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 29.07.2024ஆம் தேதி காலை 10.00 மணிக்கு அலுவலில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை தாலுகா, கீழக்கரை தட்டான் தோப்பு தெருவைச் சேர்ந்த நா.ரகு, வயது 35/2024 த/பெ நாகபாண்டியன், என்பவர் நிலையம் வந்து கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் எதிரிகள் திரு.செய்யது, திரு.முருகேசன் மற்றும் திரு.நசீர் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண 16/2024 u/s 7 (c) and (A) of Prevention of Corruption Act 1988 as amended in 2018ன்படி இன்று 29.07.2024 ம் தேதி காலை 10.15 மணிக்கு வழக்கு பதிவு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N.R [signature] 29-7-24      [signature] 29/07/24.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(M. RAMACHANDRAN)
DSP / V&AC / RMD.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29.07.2024 - 10.50 மணி

Name: பெயர் ............................
Rank: நிலை ....................No. எண் ..........

செய்தேன். புகார் பின்வருமாறு அனுப்புநர் நா. ரகு, வயது 35/2024 த/பெ நாகபாண்டியன், 21/16, தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை, கீழக்கரை தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, இராமநாதபுரம் மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் எலெக்ட்ரானிக்ஸ் சர்வீஸ் தொழில் செய்து வருகிறேன். நான் எனது மனைவி ராஜசுதா பெயரில் TATA PUNCH என்கிற நான்கு சக்கர வாகனத்தை மதுரையைச் சேர்ந்த ஸ்ரீ சைமா கார்ஸ் பிரைவேட் கம்பெனியின் இராமநாதபுரம் கிளையில் ரூ.50,000/– கொடுத்து புக்கிங் செய்த பின்பு கடந்த 21.01.2024 ஆம் தேதி மேற்படி காருக்கான விலை, ரோடு டேக்ஸ் மற்றும் சம்மந்தப்பட்ட அனைத்து வரிகள் மற்றும் ரிஜிஸ்ட்ரேசன் சார்ஜஸ் உட்பட அனைத்து தொகை ரூ.7,32,000/– செலுத்தி விட்டு காரை கம்பெனியில் இருந்து எடுத்தேன். அதன்பின் கடந்த 30.01.2024 ஆம் தேதி ஆர்.டி.ஓ ஆபிசிற்கு ரிஜிஸ்ட்ரேசன் சான்றிதழ் பெற காரை நேரில் காண்பித்தேன். அன்றே எனது மனைவியின் பெயரில் கார் ரிஜிஸ்ட்ரேசன் நடைமுறைகள் முடிவுற்றது எனவும் உங்களது ஆர்.சி.புத்தகம் உங்களின் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள் என்றும் கூறினார்கள். மேலும் அன்று நான் வீட்டிற்கு வந்த பிறகு நசீர் என்பவர் என்னை தொடர்பு கொண்டு நான் மேற்படி கார் டீலரின் புரோக்கர் என்றும் உங்கள் காரின் ஆர்.சியை பெறுவதற்கு ரூ.2500/– ஆர்.டி.ஓ அலுவலக அதிகாரிகளுக்கு கொடுப்பதற்கு தரவேண்டும் எனக்கூறினார். நான் பணமெல்லாம் கொடுக்க முடியாது கார் டீலரிடம் பேசிக்கொள்கிறேன் எனக்கூறினேன். பின்னர் நான் ஒரு வாரம் கழித்து டீலரிடம் சென்று அங்கு இருந்த மேனேஜர் திரு.முருகேசன் அவர்களிடம் மேற்படி நசீர் என்னிடம் பணம் கேட்ட விபரத்தை கூறி, லஞ்சமாக பணமெல்லாம் தரஇயலாது நான் என்னுடைய காருக்குண்டான தொகையை முழுமையாக செலுத்தி விட்டேன் என்று கூறி எனது ஆர்.சி.புத்தகம் எங்கே எனக் கேட்டேன். அதற்கு முருகேசன், நசீர்

என்பவர் எங்களது ஏஜெண்டு அவர் மூலமாகத்தான் எங்களது வாகனங்களை ஆர்.டி.ஓ ஆபிசில் பதிவு செய்கிறோம். அவர் கேட்டவாறு ஆர்.டி.ஓ ஆபிசுக்கென பணம் கொடுத்தால் தான் உங்க ஆர்.சி.புத்தகம் தரஇயலும் எனக்கூறினார். அதற்கு அப்போதைககு நான் பதில் ஒன்றும் கூறாமல் எப்படியும் எனது ஆர்.சி.புத்தகத்தை ஆர்.டி.ஓ ஆபிசில் இருந்து தபாலிலோ அல்லது நேரிலோ பெற்றுக்கொள்ளலாம் என்று நினைத்து ஒன்றும் சொல்லாமல் வந்து விட்டேன். அதனைத்தொடர்ந்து எனது வீட்டிற்கு ஆர்.சி.புத்தகம் வராததால் கடந்த இரண்டு மாதங்களுக்கு முனபு இராமநாதபுரம் ஆர்.டி.ஓ அலுவலகம் சென்று ஆர்.சி.புத்தகத்தை டெஸ்பேட்ச் செய்யும் அலுவலர் திரு.செய்யது உதவியாளர் என்பவர் என்னிடம், எனது ஆர்.சி.புத்தகம் பற்றி கேட்க, அவர், உங்களுடைய ஆர்.சி.புத்தகத்தை நான் டீலரிடம் அனுப்பி விட்டேன் என்றும் நீங்க டீலரிடம் சென்று கேளுங்கள் என்றும் ஆர்.டி.ஓ ஆபிசுக்கென பணம் கொடுப்பது பெண்டிங் இருந்தால் அதை கொடுத்தால் தான் உங்க ஆர்.சி.புத்தகத்தை தருவாரகள் எனக்கூறினார். அதனைத்தொடர்ந்து மதுரையில் உள்ள ஸ்ரீ சைமா காரஸ் பிரைவேட் கம்பெனிக்கு போன் செய்து மேற்படி முழு விபரத்தையும் சொல்லி எனது ஆர்.சி. புத்தகத்தை பற்றி கேட்டதற்கும் அவர்களும் அதே பதிலை கூறினார்கள். இந்நிலையில் எனது புதிய காரை கடந்த 25.07.2024ஆம் தேதியன்று 3வது சர்வீசுக்காக அதே டீலரின் ஒர்க்ஷாப்பில் விட்ட போது, காரில் ஏற்பட்டுள்ள பழுதை இனஸ்சூரனஸ் தொகை பெற்று பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளதால் ஆர்.சி.புத்தகம் அவசியம் எனக்கேட்டாரகள். அதற்கு நான உங்களிடம் தான் உள்ளது என்று திரு.முருகேசன், மேனேஜர என்பவரிடம் கேட்டதற்கு, உங்களுடைய ஆர்.சி புத்தகம் எங்களின் புரோக்கர் நசீரிடம் தான் இருக்கிறது எனவும் ரூ.2,500/–ஐ ஆர்.டி.ஓ அலுவலகத்தில் பணிபுரியும் செய்யது என்பவருக்கும் பிற அதிகாரிகளுக்கும் ஆர்.சி புத்தகம் ரெடி செய்ததற்கு பணம் கொடுத்து தான் அவர் முடித்திருப்பார் எனவே அவரிடம் ரூ.2500/–ஐ கொடுத்துட்டு ஆர்.சி.புத்தகத்தை வாங்கிட்டு வாங்க என சொல்லி அவருடைய மொபைல் நம்பரையும் எனக்கு கொடுத்தார். பின்பு நான் அங்கிருந்து வெளியே

வந்து, சற்று நேரம் கழித்து மேற்படி நசீரை போனில் தொடர்பு கொண்டு ஆர்.சி.புத்தகத்தை கேட்டதற்கு, அவர் மேற்படி மேனேஜரையும் கான்பிரன்ஸ் காலில் வரவழைத்து விட்டு இருவரும் என்னிடம் ரூ.2,500/–ஐ கொடுத்தால் தான் ஆர்.சி புத்தகம் கிடைக்கும் எனவும் நீங்க கொடுக்கும் ரூ.2500/– ல் ரூ.2000/– ஆர்.டி.ஓ அலுவலகத்தில் பணிபுரியம் அதிகாரிகளுக்கு ஆர்.சி புத்தகம் ரெடி செய்ததற்கும் ரூ.500/– என்னுடைய சர்வீஸ் சார்ஜாகும் என விபரம் கூறினார்கள். மேலும் அப்போது நசீர், உங்களுக்காக என்னுடைய சர்வீஸ் சார்ஜ் குறைத்துக் கொண்டு ரூ.2000/–மாவது கொடுங்கள் என்று கூறினார். நானும் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டு போனை வைத்து விட்டேன். பின்னர் மறுநாள் காலை மீண்டும் ஒருமுறை நசீரை போனில் தொடர்பு கொண்டு ரூ.1500/–ஆக குறைக்கும் படி கேட்டதற்கு முடியாது என மறுத்து டீலரிடமே பேசிக்கொள்ளுங்கள் என கராராக பேசி விட்டு போனை துண்டித்தார். பிறகு நான் மதியம் சுமார் 02.00 மணியளவில் ஆர்.டி.ஓ அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் செய்யது என்பவரை நேரில் சந்தித்து ஆர்.சி புத்தகத்திற்கான ரூ.2000/– பணம் கேட்கிறார்கள் என கேட்டதற்கு, எனது ஆர்.சி புத்தகம் எங்கே என கேட்டதற்கு, நான் ஏற்கனவே உங்களிடம் கூறியவாறு ஆர்.சி.புத்தகத்தை நான் நசீர் என்பவர் மூலம் டீலரிடம் அனுப்பி விட்டேன் என்றும் நீங்கள் அவர்களிடம் சென்று கேளுங்கள் என்றும் ஆர்.டி.ஓ ஆபிசுக்கென பணம் கொடுப்பது பெண்டிங் இருந்தால் அதை கொடுத்தால் தான் உங்க ஆர்.சி.புத்தகத்தை தருவார்கள் எனக்கூறினார். இதனைத்தொடர்ந்து நான் மீண்டும் அன்று மாலை நசீரை நேரில் சந்தித்து விபரம் கேட்ட போது நீங்கள் ஆர்.டி.ஓ அலுவலகம் சென்று நேரில் விசாரித்ததை நசீர் என்னிடம் கூறினார் எனவே நீங்க டீலரையே பாருங்க என்று கூறினார் பின்னர் சற்று நேரம் கழித்து மீண்டும் நசீர் எனக்கு இரண்டு முறை போன் செய்து டீலரிம் பணத்தை கொடுத்து வாங்கிக் கொள்ளுங்கள் என்றும் உங்கள் புக்கை நான் அங்கு கொடுத்து விடுகிறேன் எனக்கூறினார். அதனைத்தொடர்ந்து நான் மீண்டும் 27.07.2024ஆம் தேதி சனிக்கிழமை மேனேஜரை நேரில் சந்தித்த போது ஆர்.டி.ஓ ஆபிசுக்கு உங்களுடைய காரை

பதிவு செய்வதற்காக ஏற்கனவே கொடுத்த லஞ்சப்பணத்தை கொடுத்தால் மட்டுமே உங்களுடைய ஆர்.சி.புத்தகம் கிடைக்கும் என கராராக கூறி திங்கள்கிழமை காலையில பணத்தோட வாங்க என்று கூறினார். நானும் வேறு வழியில்லாமல் சரி பார்போம் எனகூறி விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். பின்பு, நான் யோசித்து பார்த்து சட்டபூர்வமாக செய்ய வேண்டிய அரசு பணியை செய்ததற்காக என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.2000/- கேட்ட இராமநாதபுரம் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் உதவியாளர் திரு.செய்யது, திரு.முருகேசன், மேனேஜர், ஸ்ரீ சைமா கார்ஸ் பிரைவேட் கம்பெனி, இராமநாதபுரம் மற்றும் திரு.நசீர், ஆர்.டி.ஓ அலுவலக புரோக்கர் ஆகியோர்கள் மீது புகார் செய்ய முடிவு செய்து மேற்படி நபர்களின் மீது தக்க நடவடிக்கை எடுத்து எனது மனைவியின் பெயரில் உள்ள ஆர்.சி.புத்தகத்தை மீட்டுத்தரும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இம்மனுவுடன் எனது வாகனம் வாங்க நான் செலுத்திய முழுத்தொகை தொடர்பான ரசீதுகளின் நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் மேற்படி நபர்களிடம் பேசிய தொலைபேசி உரையாடல்களை விசாரணையின் போது தங்களிடம் சமர்ப்பிக்கிறேன். இப்படிக்கு (N.Raghu) 29.07.2024 அய்யா, மேற்படி புகாரை இன்று 29.07.2024ம் தேதி 10.00 மணிக்கு என்னால் பெறப்பட்டு வாதி மற்றும் எதிரிகளின் முன்னடத்தை பற்றி இரகசிய விசாரணை மேற்கொண்டு இன்று 29.07.2024ம் தேதி 10.15 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 16/2024 பிரிவு 7 (c) and (A) of P.C. Act, 1988 as amended in 2018ன்படி வழக்கு பதிவு செய்தேன். ஒப்பம் (M.Ramachandran), 29.07.2024, DSP, V&AC, Rmd. முதல் தகவல் அறிக்கை அசலை வாதியின் புகாருடன் இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

29/07/24

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.